(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.73/2014 |
| Deposition Of Witness for | : | PW14 |
| Name | : | **Thiru.R.Pandiarajan** |
| Father's Name | : | Thiru.Ramaiah |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **12th March 2026.**

(எதிரி ஆஜர்.. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை</u> :

1. நான் மதுரை, ஊ.த.க பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் அடிப்படையில் கடந்த 30.06.2018-ல் பணிஓய்வு பெற்றேன். அதற்கு முன்பாக கடந்த 2001 முதல் 2012 வரை சிவகங்கை, ஊ.த.க பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன். அப்போது 10.11.2011-ம் தேதி எமது உயர் அதிகாரியின்

உத்தரவின்படி மேற்படி ஊ.த.க. பிரிவு குற்ற எண்.11/2011 வழக்கை மேல் விசாரணைக்காக அப்போதைய காவல் ஆய்வாளர் திரு.ராஜா அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டேன். இவ்வழக்கில் தேவையான ஆவணங்களை சேகரித்துள்ளேன்.

2. இவ்வழக்கின் சென்னை ரசாயன பரிசோதனை கூடத்திற்கு ஆய்விற்காக அனுப்பப்பட்டதில் ஆய்வு முடிந்து மீதமுள்ள கரைசல் அடங்கிய பாட்டில்கள் மற்றும் பகுப்பாய்வு அறிக்கை உள்ளடங்கிய தபால் பெற்றுவர ஏற்பாடு செய்தேன். இவ்வழக்கில் திருப்புவனம், உதவி செயற்பொறியாளர், மின்வாரியம், திரு.மொண்டி அவர்களை விசாரித்தேன். இவ்வழக்கில் அரசு சாட்சிகளாக செயல்பட்ட திரு.S.V.கோபால், கண்காணிப்பாளர், மாவட்ட கருவூலம், சிவகங்கை மற்றும் திரு.S.சம்பத், உதவி இயக்குநர், சுகாதார மற்றும் ஊரகப்பணிகள் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. மானாமதுரை மின்வாரிய உதவி செயற்பொறியாளர் பொறுப்பு செயற்பொறியாளர் திருமதி.லதாதேவி மற்றும் இவ்வழக்கின் புகார்தாரர் திருப்பூரைச் சேர்ந்த முருகசாமி மேற்படி வாதியின் தொழிற்சாலையில் மேனேஜராக பணிபுரிந்த திரு.பிரபாகரன் (எ) செந்தில் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கீழடி மின்வாரிய போர்மேன்

திரு.முத்துமணி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.. கீழடி உதவி மின்பொறியாளரின் உடனடி மேலதிகாரியான திரு.பாலசுப்பிரமணியன், உதவி செயற்பொறியாளர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து பொறிவைப்பு நடவடிக்கையை மேற்கொண்ட காவல் ஆய்வாளர் திரு.ராஜா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டுவாரிய உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் திரு.காமராஜ் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மானாமதுரை செயற்பொறியாளர் அலுவலக தொழில்நுட்ப உதவியாளர், திரு.கோபிகுமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். திருப்புவனம் உதவி செயற்பொறியாளர் அலுவலக வணிக ஆய்வாளர் திரு.நாகநாதன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. இவ்வழக்கின் பொறிவைப்பு நடவடிக்கை நடந்த இடமான மதுரை TPK ரோடு, திருப்பரங்குன்றம் ரோட்டில் அமைந்துள்ள விஜய் லாட்ஜ் பகல் மற்றும் இரவு நேர மேலாளர்களான திரு.சரவணன் மற்றும் திரு.தங்கப்பாண்டியன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சிவகங்கை மேற்பார்வை பொறியாளர் அலுவலக உதவியாளர்,

திரு.செல்வராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். புகார்தாரர் தொழிற்சாலைக்கு மின்வாரியத்தில் மின்வாரிய வேலை ஒப்பந்த அடிப்படையில் பெற்று அலுவல் மேற்கொண்ட திரு.குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு எவ்விர ஆட்சேபனையும் இல்லை என்று கடிதம் வழங்கிய பொட்டப்பாளையம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் திரு.குழந்தை அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வாதியின் தொழிற்சாலைக்கு மின்கம்பங்கள் ஊன்றப்பட்ட இடத்திற்கு ஆட்சேபனை தெரிவித்ததால் வட்டாட்சியர் உத்தரவுபடி மேற்படி இடத்தை அளந்து காண்பித்த பொட்டப்பாளையம் கிராம நிர்வாக அலுவலர் கொந்தகை, உதவி அளவையர் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் வாதி பயன்படுத்திய மொபைல் மற்றும் ஆஜர் எதிரி பயன்படுத்திய மொபைல் அவற்றினுடைய Call Details கேட்டு காரைக்குடி BSNL மற்றும் Reliance company –களுக்கு கடிதம் வைத்து அதற்குண்டான பதிலைப் பெற்று அதைவழங்கிய அலுவலர்களான திரு.சுப்பிரமணியன் மற்றும் செல்வி.கலைமகள் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி தொழிற்சாலைக்கு மின்கம்பங்கள் நடப்பட்ட இடம் குறித்து ஆட்சேபனை தெரிவித்த திரு.குதாபஸ்க் என்பவரை விசாரித்து

வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி வாதிக்கு தொழிற்சாலை துவங்க நிலம் கொடுத்த திரு.முரளிதரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5. மின்வாரிய வருவாய் ஆய்வாளர் திரு.பழனிவேல் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் ரசாயன பரிசோதனை செய்த சென்னை தடயவியல் அறிவியல் அலுவலர் திருமதி.விசாலாட்சி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் விசாரணைக்கு உதவியாக இருந்த தலைமைக்காவலர் திரு.சிவகுமார் மற்றும் காவலர் பழனியப்பன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சிறப்பு நீதிமன்ற எழுத்தர் திரு.ராஜேந்திரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி வழக்கின் புலன் விசாரணையில் இவ்வழக்கின் வாதியான முருகசாமி என்பவருக்கு பொட்டப்பாளையம், கரிசல்குளம் கிராமத்தில் உள்ள நிலத்தில் Bleaching Factory Splender Process என்ற பெயரில் Bleaching Factory ஆரம்பிப்பதற்கு மின்இணைப்புதொடர்பாக கீழடி உதவி மின்பொறியாளரான ஆஜர் எதிரியை சந்தித்து கடந்த 18.10.2011 அன்று சாட்சி செந்தில் என்பவருடன் சென்று தனது தொழிற்சாலைக்கு விரைவில் மின்இணைப்பு கொடுக்க மின் ஒயர்கள் இழுக்கும் பணி மேற்கொள்ளுமாறு கேட்டபோது ஆஜர் எதிரி

தனக்கு கையூட்டாக பணம் ரூ.10000/— கேட்டும், மீண்டும் வாதி 08.11.2011 அன்று அவரது அலுவலகத்தில் சந்தித்து கேட்டபோது தனக்கு ரூ.10000/— கொடுத்தால்தான் மேற்படி வேலையை தொடர முடியும் என்று வலியுறுத்தி ஆஜர் எதிரி கேட்டதும் மற்றும் 09.11.2011ம் தேதி ஆஜர் எதிரியின் உத்தரவுபடி வாதி தனது செல்போனில் தொடர்பு கொண்டபோது அவர் கூறிய அறிவுறையின்பேரில் மதுரையில் நீங்கள் தங்கியிருக்கும் இடத்திற்கு செல்லுங்கள், நான் அங்கு வந்து பணத்தை வாங்கிக்கொள்வதாக ஆஜர் எதிரி கூறியதும், அதன்பிறகு அன்று இரவே சுமார் 7.47 மணிக்கு ஆஜர் எதிரி மேற்படி வாதி தங்கியிருந்த விஜய் லாட்ஜ் என்ற தங்கும் விடுதிக்கு சென்று அறை எண்.308—ல் ரூ.10000/—ஐ வாதியிடம் கேட்டு வாங்கி அதை எண்ணிப்பார்த்து தனது பேண்டில் வைத்துக்கொண்டது அரசு சாட்சி முன்னிலையில் உறுதியானது எனது விசாரணையில் தெரியவந்தது.

6. எனவே, ஆஜர் எதிரி மீது குற்ற வழக்கு நீதிமன்றத்தில் தொடரலாம் என வரைவு இறுதி அறிக்கையினை பிரிவு 7 மற்றும் 13(2) r/w 13(1)(d) ஊ.த.ச சட்டம், 1988—ன் படி தயாரித்து இயக்குநர், ஊ.த.க. பிரிவு, சென்னை அவர்களுக்கு கடந்த 31.12.2011 அனுப்பி வைத்தேன். அதன்பிறகு நான் சிவகங்கை ஊ.த.க பிரிவிலிருந்து மாறுதலாகி

சென்றதால் மேற்படி வழக்கு கோப்பை அப்போதைய காவல் துணை கண்காணிப்பாளர் திரு.அருள்ஆனந்த் அவர்களிடம் ஒப்படைத்து சென்றேன். அவர் என்னை விசாரித்து வாக்குமூலம் செய்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. அரசு வழக்கு படி வாதி முருகசாமியின் Bleaching Factory க்கு மின் ஒயர் இழுத்து மின்இணைப்பு கொடுப்பதற்காக வாதியிடம் எதிரி ரூ.10000/- கேட்டதாகத்தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதியின் Bleaching Factory-ஆனது மின்வாரிய Category III-B ல் வரக்கூடியது என்றால் சரிதான். அந்த தொழிற்சாலைக்கு மின்இணைப்பு கொடுக்க சிபாரிசு செய்வற்கோ மின் இணைப்பு கொடுப்பதற்கோ இந்த எதிரிக்கு அதிகாரம் கிடையாது என்றால் செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளரின் உத்தரவுபடி அதற்குண்டான வேலைகளை பார்ப்பதற்கு அதிகாரம் உண்டு.

2. அதனால் இறுதி முடிவெடுக்கும் அதிகாரமோ, சிபாரிசு செய்யும் அதிகாரமோ கிடையாது என்றால் சரிதான். தொழிற்சாலைக்கு புதிதாக மின்இணைப்பு கொடுப்பதற்கு என்னென்ன வழிமுறைகள் கையாள வேண்டும், அதில் உதவி செயற்பொறியாளரின் பொறுப்பு மற்றும் கடமைகள் என்னவென்று மின்சார வாரியத்தால் ஒரு Guidelines மற்றும்

Rules கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை. அது சம்பந்தமான இந்த எதிரி செய்யவேண்டிய கடமைகள் மற்றும் பொறுப்புகள் சம்பந்தமான ஏதாவது Guidelines மற்றும் Rules ஆகியவற்றை கைப்பற்றினேனா என்றால் கைப்பற்றவில்லை, விசாரணையின்போது உயர்அதிகாரிகளை விசாரித்து அது தொடர்பாக ஆவணங்களை பெற்றுள்ளேன். இது சம்பந்தமாக யாரை விசாரித்து என்னென்ன ஆவணங்களை பெற்றேன் என்றால் மானாமதுரை செயற்பொறியாளர் பொறுப்பு வகித்த திருமதி.லதாதேவி மற்றும் திருப்புவனம் உதவி செயற்பொறியாளர் மூர்த்தி அவர்களை விசாரித்து கடிதங்கள் பெற்றுள்ளேன். அந்த கடிதங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் தாக்கல் செய்யவில்லை, எனக்கு பிறகு விசாரணை மேற்கொண்ட அலுவலரிடம் மேற்படி உதவி செயற்பொறியாளர் எனக்கு அனுப்பிய கடிதத்தினை ஒப்படைத்துள்ளேன். எனது விசாரணை முடிந்து கோப்பை காவல் துணை கண்காணிப்பாளரிடம் கொடுத்த பிறகு உதவி செயற்பொறியாளர் எனக்கு கடிதம் அனுப்பினாரா என்றால் எனது விசாரணை காலத்திலேயே அவர் கொடுத்தார்.

3. உதவி செயற்பொறியாளர் எது குறித்து கடிதம் அனுப்பினார் என்றால் மின்வாரிய தளவாட சாமான்கள் பொறுத்தும்பணி 90

நாட்களுக்குள் முடிக்க வேண்டும் என்றும் உத்தரவு உள்ளது என்பதை குறித்து கடிதம் அனுப்பினார். நான் சொல்வதுபோல் எந்த கடிதத்தினையும் பெறவில்லை என்றாலும் அதனை எனக்கு பிந்தைய விசாரணை அதிகாரியிடம் ஒப்படைக்கவில்லை என்றாலும் சரியல்ல. அந்த தொழிற்சாலையை நான் சென்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த தொழிற்சாலையிலிருந்து எந்த பக்கம் எவ்வளவு தூரத்தில் மின்வாரிய Transform இருக்கிறது என்றால் தொழிற்சாலைக்கு அருகிலேயேஇருந்தது, தூரம் தெரியவில்லை, எந்த திசையில் இருந்தது என்றும் தெரிவில்லை. அந்த Transform என்பது மின்வாரியத்தால் வாதியின் தொழிற்சாலைக்கு மின்சாரம் கொடுக்கப்பதற்காக தனியாக அமைக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த Transform–க்கும் வாதியின் தொழிற்சாலைக்கும் இடையே எத்தனை மின் கம்பங்கள் ஊன்றப்பட்டிருந்தது என்றால் மேற்படி தொழிற்சாலைக்காக 11 மின்கம்பங்கள் நடப்பட்டிருந்தது.

4. ஒவ்வொரு மின்கம்பத்திற்கும் இடையே 1 பர்லாங் தூரம் இருக்க வேண்டும் என்பது விதிமுறை என்றால் சரிதான், வளைவான இடங்களில் அந்த விதிமுறை கடைபிடிக்க முடியாது. அப்படி ஏதாவது தொழிற்சாலைக்கும், Transform–க்கும் இடையே வளைவான பகுதி இருந்ததா என்றால் ஒரு இடத்தில் மட்டும் அவ்வாறு இருந்தது, எந்த

சர்வே எண் என்று ஞாபகமில்லை. Transform–லிருந்து வாதியின் தொழிற்சாலைக்கு இடையே மின்கம்பங்கள் ஊன்றப்பட்ட இடம் அரசாங்கத்திற்கு சொந்தமான புறம்போக்கு நிலம் என்பது எனது விசாரணையில் தெரிய வந்ததா என்றால் சரிதான். இந்த வழக்கில் ஆட்சேபனை செய்ததாக சொல்லும் குதாபக்ஸ் என்பவருக்கு Transform–லிருந்து வாதியின் தொழிற்சாலைக்கு இடையே மின்கம்பங்கள் ஊன்றப்பட்ட இடத்தில் நிலம் உள்ளதா என்றால் இல்லை. ஆகவே, குதாபக்ஸ் என்பவர் தவறான தகவல் சொல்லி சம்பந்தப்பட்ட தனக்கு பாத்தியமென மின்சார வாரியத்திற்கும் இந்த எதிரிக்கும் ஆட்சேபனை எழுத்துமூலமாக தெரிவித்திருந்தார் என்று எனது விசாரணையில் தெரிய வந்ததா என்றால் சரிதான். அப்படி பொய்யான தகவல் சொல்லி ஆட்சேபனை தெரிவித்த குதாபக்ஸ் என்பவர் மீது ஏதேனும் நடவடிக்கை தொடரப்பட்டதா என்றால் தெரியவில்லை. அப்படி ஏதாவது அந்த மின் இணைப்பு சம்பந்தமாக ஆட்சேபனை மின் கம்பம் ஊன்றுவதிலோ, மின் இணைப்பு கொடுப்பதிலோ ஆட்சேபனை தெரிவித்தால் அதை நிவர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு அந்த Consumer/Applicant ன் பொறுப்பு என்றால் சரிதான், ஆனால் மின் கம்பங்கள் நடப்பட்டுவிட்டன, வேலையை துவங்குவதற்கு முன்பு அவர் ஆட்சேபனை தெரிவித்தால் அதை

நுகர்வோர் நிவர்த்தி செய்ய வேண்டும், வேலையை மேற்கொள்ள கூடாது, வேலை ஆரம்பித்த பிறகு ஆட்சேபனை தெரிவித்தால் வேலையை தொடரலாம், இல்லையெனில் நீதிமன்ற உத்தரவு இருந்தால் வேலையை நிறுத்தலாம்.

5. குதாபக்ஸ் கொடுத்தஆட்சேபனை சம்பந்தமாக வாதி முருகசாமி அந்த பிரச்சனை குறித்து எதாவது நடவடிக்கை எடுத்ததாக எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. அதற்கு மாறாக எதிரிதான் குதாபக்ஸ்க்கு கடிதம் எழுதி அவருக்கு அந்த இடத்தில் உரிமை இருந்தால் அதற்கான ஆவணங்களை சமர்ப்பிக்கும்படி எதிரி அவருக்கு கடிதம் அனுப்பியிருந்தார் என்பதை எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் அவர் தனது உடனடி மேல்அதிகாரியான உதவி செயற்பொறியாளர் உத்தரவின்பேரில் கடிதம் ஒன்றை அனுப்பினார். எதிரி அனுப்பிய கடிதத்திற்கு பதிலாக குதாபக்ஸ் என்பவர் எந்த ஆவணமோ, விளக்கமோ கொடுக்கவில்லை என்று எனது விசாரணையில் தெரிய வந்ததா என்றால் சரிதான், தெரிய வந்தது. குதாபக்ஸ் எந்த ஆவணமோ, விளக்கமோ கொடுக்காததால் மானாமதுரை தாசில்தாருக்கு எதிரியே கடிதம் அனுப்பி அந்த சொத்து கிராம கணக்குகளில் யார் பெயரில் உள்ளது என்பது சம்பந்தமாக அறிக்கை கேட்டு கடிதம் அனுப்பி

அதனடிப்படையில் மானாமதுரை வட்டாட்சியர் அவர்கள் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அதிகாரி மற்றும் சர்வேயர் உதவியுடன் சம்பந்தப்பட்ட இடத்தை அளக்கச்செய்து அதனடிப்படைடியில் அவர்கள் அளந்து சம்பந்தப்பட்ட இடம் அரசு புறம்போக்கு என கிராம நிர்வாக அலுவலர் சான்றிதழ் வழங்கியுள்ளார் என்றால் சரியல்ல, செயற்பொறியாளர் பொறுப்பு வகித்த மானாமதுரை உதவி செயற்பொறியாளர் வட்டாட்சியரிடம் கேட்டுக்கொண்டதன்பேரில் மேற்படி வேலைகள் உரிய அலுவலர்களால் மேற்படி அளவீடு செய்யும் பணி நடைபெற்றது. வாதி முருகசாமி கொடுத்த புகாரிலோ, அதன்பேரில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையிலோ அல்லது அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாக சொல்லும் வாக்குமூலத்திலோ 18.10.2011 அன்று இந்த வாதியிடமும், அவரது மேனேஜரிடமும் முதல்முறையாக ரூ.10000/- லஞ்சம் கேட்டதாக சொல்லப்படவில்லை என்றால் தீபாவளிக்கு முதல் வாரம் வியாழன் கிழமை என்று சொல்லியுள்ளார், தேதியும் சொல்லியுள்ளார்.

6. இந்த முருகசாமியின் தொழிற்சாலைக்கு போல் ஊன்றுவது மற்றும் அது சம்பந்தப்பட்ட வேலைகளுக்காக தளவாட சாமான்களை வாங்குவது எதிரி தன்னிச்சையாக வாங்க முடியாது என்றாலும் உயர் அதிகாரிகளின் உத்தவின்பேரில்தான் செய்ய முடியும் என்றாலும் சரிதான்.

அந்த தளவாடங்களை எதிரி உதவி செயற்பொறியாளருக்கு Estimate அறிக்கை சமர்ப்பித்து அதனடிப்படையில் எவ்வளவு சாமான்களை தேவை என்பதை தெரிவித்து உதவி செயற்பொறியாளர் உத்தரவின்பேரில் மட்டுமே மானாமதுரை மின்வாரிய பண்டக சாலையிலிருந்து எதிரி அந்த பொருட்களை பெற இயலும் என்றால் சரிதான். அந்த முருகசாமியின் தொழிற்சாலைக்கு 72 Item தளவாட சாமான்களை தேவைப்படுவதாக Estimate ல் குறிப்பிட்டிருந்தார் என்றால் சரிதான். ஆனால், அவர் கேட்ட 72 தளவாட சாமான்களில் அந்த மானாமதுரை பண்டக சாலையில் 28 தளவாட சாமான்கள் மட்டுமே இருந்தது என்றாலும், மீதமுள்ள தளவாட சாமான்கள் அங்கு இல்லை என்றாலும் அது குறித்து எனக்கு நினைவில்லை.

7. நான் சொன்னதுபோல் 18.10.2011–ம் தேதி எதிரி மானாமதுரையில் உள்ள மின் பண்டக சாலையில் அந்த தளவாட சாமான்களை பெற்று வருவதற்காக கீழடி மின் வாரிய அலுவலகத்திலிருந்து அன்று காலை 8.00 மணிக்கே மானாமதுரைக்கு புறப்பட்டு சென்று அந்த தளவாட சாமான்களை மானாமதுரை பண்டக சாலையில் பெற்று மாலை 5.00 மணிக்கு பிறகுதான் பண்டக சாலையிலிருந்து தன்னுடைய அலுவலகத்திற்கு வந்ததாக எனது விசாரணையில் தெரிய வந்ததா என்றால் நினைவில்லை. அதேபோல்

இந்த திருப்புவனம், நெல்புரிக்கரையில் மின்வாரிய அலுவலகத்தில் பணியாற்றிய உதவி செயற்பொறியாளர் K. மொண்டி என்பவர் பணிமாற்றம் செய்யப்பட்டு கடந்த 09.11.2011ம் தேதி சென்றுவிட்டார் என்பது எனது விசாரணையில் தெரியவந்ததா என்றால் சரிதான். அதற்கு முதல்நாள் 08.11.2011–ம் தேதி அவரது ஆளுகைக்கு உட்பட்ட துணை மின் நிலையங்களில் நிலுவையிலிருந்த கோப்புகளை முடிப்பதற்காக எதிரிபணியாற்றிய கீழடி துணை மின் நிலை ஆவணங்களையும் மற்றும் இதர துணை மின் நிலைய ஆவணங்களையும் சம்பந்தப்பட்ட துணை மின் பொறியாளர்களையும் திருப்புவனத்திற்கு எடுத்து வரும்படி 08.11.2011 அன்று கொடுத்த உத்தரவுபடி இந்த எதிரி 08.11.2011 அன்று அவர் பணியாற்றிய கீழடி துணை மின் அலுவலகத்தில் நிலுவையில் இருந்த கோப்புகளை அன்று காலை 8.00 மணிக்கே திருப்புவனம் உதவி மின்பொறியாளர் அலுவலகத்திற்கு எடுத்து சென்று அங்கே மாலை 6.00 மணி வரை அங்கே நிலுவையிலிருந்த கோப்புகள் தொடர்பாக உதவி மின்பொறியாளருடன் இருந்தார் என்பது எனது விசாரணையில் தெரியவந்ததா என்றால் விசாரணையில் தெரியவரவில்லை.

8. 08.11.2011ம்தேதி 2வது தடவை எதிரி முருகசாமியிடம் Demand செய்ததாக சொல்லும் தேதியன்று இந்த எதிரி கீழடி உதவி

மின்வாரிய அலுவலகத்திலேயே இல்லை என்றும் அவர் அன்றைய தினம் காலை 8.00 மணிக்கே கீழடி உதவி மின்வாரிய அலுவலகத்திலிருந்து திருப்புவனம், உதவி செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று அன்று மாலை வரை அவருடன்தான் இருந்தார் என்பது எனது விசாரணையில் தெரிந்து கொண்டும் அதை வழக்கிற்காக மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த முருகசாமியின் மேனேஜர்களாக எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் பிரபாகரன் (எ) செந்தில் என்ற ஒரு நபர் தான் இருந்தார். எந்த ஊரைச் சேர்ந்தவர் என்றால் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள எட்டுக்குடி அஞ்சல், சொர்ந்நகுடி கிராமத்தினை சேர்ந்தவர். அந்த நபர் முருகசாமியின் மேலாளராக பணிபுரிந்தார் என்பதற்குரிய ஆவணத்தினை கைப்பற்றினேனா என்றால் இல்லை, விசாரணையில் தெரிந்து கொண்டேன். அவருக்கு பிரபாகரன் (எ) செந்தில் என்ற இரண்டு பெயர் உள்ளது என்பதற்குண்டான ஆவணங்களை கைப்பற்றினேனா என்றால் இல்லை.

9. செந்தில் என்ற நபர் ஈரோடு மாவட்டத்தினை சேர்ந்தவர் என்றும் பிரபாகரன் என்பவர் தஞ்சாவூர் மாவட்டத்தினை சேர்ந்தவர் என்பதும் எனது விசாரணையில் தெரிய வந்ததா என்றால் இல்லை. அவ்வாறு செந்தில் (எ) பிரபாகரனோ, பிராபாகரன் என்பவரோ அ.சா.2

முருகசாமியிடம் மேனேஜராக எந்த காலத்திலும் பணிபுரிந்தது இல்லை என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ–2 ஆன புகாரில் K.K.செந்தில்குமார் என்ற நபர் சாட்சி கையொப்பம் செய்துள்ளதாக உள்ளது என்றால் சரிதான், அந்த கையொப்பம் யார் போட்டார் என்று எனக்கு தெரியாது, எனது விசாரணையில் தெரிந்து கொள்ளவில்லை. நான் தஞ்சாவூரைச்சேர்ந்த பிலாமினா நகர், கதவு எண்.63/1 ல் வசிக்கும் முருகையன் மகன் பிரபாகரன் என்பவரை விசாரித்தேனா என்றால் இல்லை. அந்த நபர் அ.த.சா.ஆ–2 ல் சாட்சி கையொப்பம் போட்ட நபரா என்றால் இல்லை. அந்த சாட்சி கையொப்பம் செய்த நபர் யார் என்றால் எனது விசாரணையில் பிரபாகரன் (எ) செந்தில் என்பவர்தான் கையொப்பம் செய்ததாக சொல்லியுள்ளார். அந்த நபரை அ.சா.9 ஆக இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ளார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. முருகய்யன் மகன், எட்டுக்குடி அஞ்சல், திருக்குவளை தாலுகா, நாகப்பட்டினம் மாவட்டத்தினை சேர்ந்த செந்தில் (எ) பிரபாகரன் என்பவரைதான் நான் விசாரணை செய்தேனா என்றால் சரிதான். அவர்தான் அ.த.சா.ஆ–2–ல் சாட்சி கையொப்பம் செய்த நபரா என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த நபர் செந்தில் (எ) பிரபாகரன் இறந்து விட்டதாக இந்த வழக்கில் இந்நீதிமன்றத்தில் அரசு

தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. *(அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி கேள்விக்கு ஆட்சேபனை தெரிவித்து அவ்வாறான நபர் இறந்து விட்டதாக அரசு தரப்பில் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்படவில்லை என்று கூறுகிறார்.)*

10. புகாரில் சாட்சி கையொப்பம் செய்துள்ள K.K. செந்தில்குமார் என்ற நபர் இல்லை என்றும் அதேபோல் செந்தில் (எ) பிரபாகரன் என்ற ஒரு நபரே திருக்குவளை தாலுகா, நாகப்பட்டினம் மாவட்டத்தில் இல்லை என்றும் ஆள்மாராட்டம் செய்து அ.த.சா.ஆ.2–ல் யாரோ ஒரு நபரை சாட்சி கையொப்பம் போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த K.K. செந்தில் குமார் அல்லது செந்தில் (எ) பிரபாகரன் அல்லது பிரபாகரன் (எ) செந்தில் ஆகியோர்கள் யாராவது முருகசாமியிடம் மேனேஜராக இருந்தார்கள் என்பதை காட்டக்கூடிய எந்த ஆவணத்தையும் நாங்கள் எனது விசாரணையில் கைப்பற்றவில்லை என்றால் சரிதான்.

11. நான் சென்று செல்வி.கலைமகள் என்பவரை விசாரித்தபோது முருகசாமி பயன்படுத்திய மொபைல் எண்.9344341463 என்பது கலைச்செல்வி என்பவர் பெயரில் உள்ளதாக தெரிவித்துள்ளார் என்றால் முருகசாமியின் மனைவி கலைச்செல்வி பெயரில் இருப்பதாக தெரிவித்துள்ளார். முருகசாமியின் பெயரில் தனியாக தொலைபேசி எண்

இருந்தது என்பதை எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம், மேற்படி அவரது மனைவியின் தொலைபேசியை மட்டும்தான் வைத்திருந்தார், வேறு எண் கிடையாது. பொறிவைப்பு நடவடிக்கை அலுவலர் திரு.ராஜா அவர்கள் பொறிவைப்பு நடவடிக்கை முடிந்த உடன் Vigilance Manual 47–ன் படி எதிரியிடமிருந்து எழுத்துமூலமாக ஒரு வாக்குமூலம் பெற வேண்டும் என்றால் தற்போது நினைவில்லை. அப்படி தனியான எதிரியிடம் வாக்குமூலம் திரு.ராஜா அவர்கள் பெற்றாரா என்றால் தெரியவில்லை, ஆனால் மகஜரில் அதுகுறித்து குறிப்பு உள்ளது. விஜய் லாட்ஜை சென்று நான் பார்வையிட்டேனா என்றால் பார்த்தேன். அது TPK ரோட்டில் கிழக்கு நோக்கி வாசல் உள்ள ஒரு கட்டிடம் என்றால் சரிதான். அதன் உள்ளே நுழைந்தவுடன் இடது பக்கம் வரவேற்பாளர் இருக்ககூடிய இடம் என்றாலும் அதற்கு நேர் வடக்கே அதே காலில் பார்வையாளர்கள் இருக்கும் சோபாக்களும் உள்ளது என்றால் இல்லை. அந்த வரவேற்பாளர் இருக்கும் பகுதிக்கு அடுத்து மேற்கே அதாவது இடது புறமாக மாடிக்கு செல்லும் Lift–ம் அதற்கு மேற்கே மாடிக்கு செல்லும் மாடிப்படிகளும் இருக்கிறது என்றால் சரிதான். அந்த கட்டிடம் எத்தனை மாடி கட்டிடம் என்றால் 5 மாடி கட்டிடம் ஆகும். அந்த 5 மாடி கட்டிடங்களும் தென்

வடலாக அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த தென் வடலாக உள்ளதில் நடுவில் பாதைவிட்டு இரண்டுபுறமும் அறைகள் உள்ளது என்றால் சரிதான்.

12. அறை எண்.308 என்பது 3 வது மாடியில் எந்த பக்கம் உள்ளது என்றால் 3 வது தளத்தில் பாதைக்கு வடக்கு புறம் உள்ளது, ஆனால் அந்த அறையின் நுழைவு வாயில் மேற்கு பார்த்து அமைந்திருந்தது. சம்பவத்தன்று அறை எண்.308–க்கு அருகில் வேறு அறைகளில் தங்கியிருந்த வேறு நபர்கள் குறித்து விசாரணை செய்தேனா என்றால் வேறு யாரையும் குறித்து விசாரணை செய்யவில்லை. இந்த வரவேற்பாளர் காலிலும், 5 மாடி கட்டிடங்களிலும் CCTV கேமராக்கள் பொருத்தப்பட்டிருந்தது என்றால் சம்பவ காலத்தில் இல்லை. சம்பவ காலத்தில் அந்த CCTV கேமராக்கள் இருந்தது என்றாலும், அவற்றை நான் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. பொறிவைப்பு நடவடிக்கை நடந்ததாக சொல்லும் அன்று அந்த விஜய் லாட்ஜில் வரவேற்பாளர் அறை உட்பட அனைத்து மேல் தளங்களிலும் CCTV பொருத்தப்பட்டிருந்தது என்றாலும் அதை நான் பார்வையிட்டதில் அன்றைய தினம் எதிரி அந்த லாட்ஜிற்கோ அல்லது முருகசாமி தங்கியிருந்ததாக சொல்லும் அறை எண்.308–க்கோ எதிரி சென்றதாக எந்த புகைப்படமும் இல்லாததால்

அவ்வாறு அந்த தினத்தன்று CCTV கேமராக்கள் பொருத்தப்படவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பொறிவைப்பு நடவடிக்கை நடந்ததாக சொல்லும் நாளிலும் நேரத்திலும் இந்த எதிரி மேற்படி விஜய் லாட்ஜிற்கே செல்லவில்லை என்றாலும் நான் சொன்ன 18.10.2011 அன்றோ அல்லது 08.11.2011 அன்றோ எதிரியை முருகசாமியும் அவரது மேனேஜரும் அவரது அலுவலகத்திற்கு சென்று விசாரிக்கவில்லை என்றும் அவரிடம் ரூ.10000/- லஞ்சப்பணம் கேட்கவும் இல்லை என்றாலும் சரியல்ல. இந்த எதிரி முருகசாமியிடம் எந்த நேரத்திலும் நாங்கள் சொன்னமுறையில் லஞ்சப்பணம் கேட்கவும் இல்லை, முருகசாமியிடமிருந்து எதிரி லஞ்சப்பணம் வாங்கவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

13. எதிரி அந்த பொறிவைப்பு நடவடிக்கை நடந்ததாக சொல்லும் நாளன்று அவர் தனது கீழடி அலுவலகத்திலிருந்து மதுரைக்கு பேருந்தில் வந்து விஜய் லாட்ஜிற்கு வடமேற்கே உள்ள பெரியார் பேருந்து நிலைத்தில் இறங்கி விஜய் லாட்ஜிற்கு தெற்கே உள்ள அவர் குடியிருக்கும் வில்லாபுரம் வீட்டிற்கு செல்வதற்காக விஜய் லாட்ஜ் அமைந்துள்ள TPK ரோடு வழியாக சென்ற போது அந்த விஜய் லாடஜ்ஜிற்கு அருகே அந்த ரோட்டில் எதிரியை அ.சா.2 முருகசாமி பின்தொடர்ந்து

ANITHACHRISTY J
Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.03.12 17:59:53 +0530

சென்று அவரிடம் பேச்சு கொடுத்துக்கொண்டு பொறிவைப்பு அலுவலர் திரு.ராஜா அவர்களிடம் அறிவுறைபடி எதிரிக்கு தெரியாமல் எதிரியின் பேண்ட் பின் பாக்கெட்டில் முருகசாமி பணத்தை திணித்து விட்டு ஓடி வந்துவிட்டார் என்றும் அப்போது அருகில் இருந்த லஞ்ச ஒழிப்பு குழுவினர் அவரைப் பிடித்து அந்த இடத்தில் ஜன நடமாட்டம் அதிகம் என்பதால் நேரடியாக எதிரியை சிவகங்கை லஞ்ச ஒழிப்பு பிரிவு அலுவலகத்திற்கு அழைத்து வந்து ஆவணங்களை பொய்யாக உற்பத்தி செய்து எதிரி மீது பொய் வழக்கு ஜோடிக்கப்பட்டுள்ளது என்றும் நான் எந்த சாட்சிகளையும் நான் சொன்னபடி விசாரிக்காது அவர்கள் சொன்னதாக வழக்கிற்கு தோதாக வாக்குமூலங்களை பதிவு செய்து எந்த சரியான புலன்விசாரணையும் செய்யாது இந்த எதிரி மீது மாதிரி குற்ற பத்திரிக்கையை லஞ்ச ஒழிப்பு இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பினேன் என்றாலும் உண்மை சம்பவங்களை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை :</u> இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

ANITHACHRISTY J

Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.03.12 17:59:43 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.